# நிறைவேற்றுச் சுருக்கம்

**அபிவிருத்தி பின்னணி**

கடந்த 30 ஆண்டுகளாக இலங்கை சராசரி 5% வளர்ச்சி வீதத்தை அடைந்துள்ளதோடு, நடுத்தர வருமானம் பெறும் நாடாக மாறும் நிலையில் அது உள்ளது. வறுமையைக் குறைப்பதற்கான மில்லேனியம் அபிவிருத்தி இலக்கினை அடைவதற்காக அது சரியான வழியில் நடைபோடுகிறது. ஒரே மாதிரியான வருமான நிலையைக் கொண்ட ஏனைய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் இலங்கையில் சமூகச் சுட்டிகள் உயர்ந்த நிலையில் இருப்பதால், ஏனைய பல மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளையும் அடையும் வாய்ப்பும் நாட்டுக்குண்டு. ஆயினும், 1983 இல் ஆரம்பமாகிய இன முரண்பாடு இலங்கை அதன் நிலைத்தகவுள்ள சக்தியை முழுமையாக அடைவதற்குத் தடையாகவுள்ளது. நாட்டில் இருக்கும் உறுதியான மனித வள அடித்தாளத்தையும் வளைந்து கொடுக்கக் கூடிய தனியார் துறையையும் கவனத்துக்கெடுத்துக் கொண்டால் இந்நிலைச் சக்தி அபாரமாகவுள்ளது. எனினும், மாகாணங்களுக்கிடையிலான வருமான வேறுபாடு தீவிரமாகவுள்ளதோடு வடக்கையும் கிழக்கையும் முடக்கி வைப்பதில் இம்முரண்பாடு பாரியதொரு காரணியாகவுள்ளது. வறுமையை மேலும் குறைப்பதற்கு துரித மற்றும் நியாயமாக வளர்ச்சியை எய்துவது மிக முக்கியமாகும். பாரிய கட்டமைப்புக் குறைபாடு மற்றும் பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் குன்றிய உற்பத்தித்திறன் வளர்ச்சிக்கான தடைகளுள் அடங்கும்.

**அரசாங்கத்தின் அபிவிருத்தி வியூகம்**

முழுச் சனத்தொகைக்கும் நன்மையினை வழங்கி நாட்டின் சமூக அபிவிருத்திக்கு வழிகோலும் விதத்தில் துரித பொருளாராத வளர்ச்சியைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தின் 10 ஆண்டு அபிவிருத்திச் சட்டகம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அது நியாயமான அபிவிருத்தியில் அழுத்தம் செலுத்துகிறது. இந்நோக்கை அடைவதற்காக, பாரிய கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்கள், கிராமங்களை இலங்கையின் நகர மத்திகள் மற்றும் உலக சந்தைகளுடன் இணைத்தல் அத்துடன் இலங்கையின் போட்டா போடும் திறனை மேம்படுத்தல் ஆகியவற்றின் மீது அரசாங்கம் கவனம் செலுத்துகிறது. தர மற்றும் பிரமாண இலக்குகளை இப்பத்தாண்டு அபிவிருத்திச் சட்டகம் முன்வைக்கிறது. இவ்விலக்குகளை அடைவதில் தனியார் துறை முக்கியமானதொரு பங்கினை வகிப்பதோடு, அதற்கு வசதியானதொரு சூழலை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்கும். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தனியார்மயப் படுத்துவதை அரசாங்கம் நிராகரித்துள்ளதோடு, மாறாக முகாமைத்துவப் பழக்கங்களை தற்காலமயப்படுத்துவதன் மூலம் சிறந்த பெறுபேறுகளை அடைய அது முயற்சி எடுக்கிறது.

**ஆசிய அபிவிருத்தி வங்கியின் அபிவிருத்தி வியூகம்**

2009 - 2011 காலப்பகுதிக்கான உத்தேச நாடு சார்ந்த பங்காளர் வியூகம் ஆசிய அபிவிருததி வங்கியின் வெற்றிகரமான கடன் மற்றும் தொழில்நுட்ப உதவித் திட்டத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லும். நாட்டின் அபிவிருத்திச் சவால்கள் பற்றிய சுயாதீன மதிப்பீடு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்னுரிமை உத்திகள் மற்றும் நாடு சார்ந்த அனுபவம், அத்துடன் அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் ஆகியவற்றின் அடிப்படையில், 10 ஆண்டு அபிவிருத்தி சட்டகத்தில் இனங்காணப்பட்டுள்ள இரண்டு தூண்கள் மீது ஆசிய அபிவிருத்தி வங்கியின் வியூகம் கவனம் செலுத்தும்: (i) முதலீட்டுக்கான சுற்றாடலை வலுப்படுத்தல், மற்றும் (ii) சகலரையும் உள்ளிட்ட சமூக அபிவிருத்தியை அடைதல் (iii) திறனைக் கட்டியெழுப்புவதற்காக புத்தாக்க அணுகுமுறையொன்றை அமுல் செய்தல் ஆகியவற்றை உள்ளிட்ட நிருவாகம் மற்றும் முதலீட்டுச் சுற்றாடலை சீர்திருத்துவதனூடக தனியார் துறையினை அபிவிருத்தி அடையச் செய்தல் ஆகியவை 2009 – 2011 காலப்பகுதிக்கான நாடு சார்ந்த வேலைத்திட்ட வியூகத்தின் இரு பிரதான பிணைந்த தூண்களாகும். முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு துரித மற்றும் நியாயமான அபிவிருத்தி உதவும் என்றிருந்த போதிலும், முரண்பாட்டுக்கான முக்கிய காரணங்கள் அபிவிருத்தி மற்றும் வறுமையைத் தாண்டியவையாக உள்ளன. துரித மற்றும் மேலும் நியாயமான அபிவிருத்திக்கு துணையாகவிருக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி, முரண்பாட்டினால் ஏற்படும் தாக்கத்தைத் தணிக்கவும் உதவும்.

முதலீட்டுச் சுற்றாடலை வலுப்படுத்தும் முதலாவது தூணின் கீழ், சீரற்ற கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களின் நிலையற்ற தன்மை போன்ற முக்கிய முட்டுக்கட்டைகள் பற்றிக் கவனம் செலுத்துவதன் மூலம் தனியார் துறையின் போட்டித் திறனை மேம்படுத்தி தனியார் முதலீடுகளின் அளவை அதிகரிக்க ஆசிய அபிவிருத்தி வங்கி நாடுகிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி (திறமையான செலவின முகாமை மற்றும் மேலும் சிறந்த வரி நிருவாகம் ஆகியவற்றின் மூலம்) பொருளாராத்தின் பல்வேறு அம்சங்களின் முகாமைத்துவத்தை சீர்திருத்தல், (ii) அரசாங்க – தனியார் பங்காளர் சம்பந்தப்பட்ட தனியார் துறை முதலீடுகளை நெறிப்படுத்துவதற்கானதொரு சட்டரீதியிலான சட்டகத்தை அறிமுகப்படுத்தல், மற்றும் (iii) எல்லாவற்றுக்கும் மேலாக பொருளாதாரக் கட்டமைப்புக்கான வசதிகளை அதிகரித்தல் ஆகியவற்றுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி பயனுடையதாகவிருக்கும். தனியார் துறை முதலீடுகளை உந்துவதற்கான அரசாங்கத் துறையின் திறனை வலுவடையச் செய்ய வேண்டியுள்ளது. எனவே, அரசாங்கத் துறையில் உறுதியான கருத்திட்ட அமுலாக்கம் ஆகியவற்றின் மூலம் வளங்களை மேலும் சிறப்பாக முகாமைப்படுத்தல், அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மற்றும் வங்கிகளின் வினைத் திறனை அதிகரித்தல் அத்துடன் முடியுமான சந்தர்ப்பங்களில் அரசாங்க – தனியார்துறை பங்காளர் நடவடிக்கைகளை அறிமுகம் செய்தல் ஆகியவை மூலம் வளங்களை மேலும்

சிறப்பாக முகாமைப்படுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி வழிவகுக்கும். இலங்கையின் அனுவபம் எடுத்துக் காட்டுவது போல், அரசாங்க – தனியார் துறை பங்காளர் நடவடிக்கை அரசாங்கத் துறையின் வினைத்திறனை மேம்படுத்துவதில் பிரயோசனமளிக்கக் கூடியதொரு கருவியாகவிருக்கும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவி மேலும் கூடிய அளவிலான தனியார்துறை முதலீடு மற்றும் போக்குவரத்து அத்துடன் சக்தி தொடர்பாகச் சீர்திருத்தப்பட்ட உட்கட்டமைப்பு ஆகியவற்றை முக்கிய இலக்குகளாகக் கொண்டிருக்கும் (உட்கட்டமைப்பு வசதிகளில் மாத்திரம் கவனம் செலுத்தாது, உதாரணமாக சக்தி மற்றும் நீர் விரயம் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வினைத்திறனை அதிகரித்தல் போன்றவையும் இதில் அடங்கும்).

சகலரையும் உள்ளிட்ட அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட இரண்டாம் தூணின் கீழ், பின்தங்கிய பிரதேசங்களில் உயர் தரத்திலான நீர் வழங்கல், சக்தி மற்றும் போக்குவரத்துக்கான வசதிகளை விரிவடையச் செய்வதற்கும், கல்வி நிலையைச் சீர்திருத்துவதற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கி முயற்சியெடுக்கும். இயன்றவரை பன்முகப்படுத்தப்பட்ட சேவைகளை அறிமுகப்படுத்துவதில் முக்கியமாகக் கவனம் செலுத்தப்படும். சக்தி மற்றும் நீர் விநியோகத் திட்டங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக இலக்குப் பார்த்து வழங்கப்படும் உதவி வறிய குடும்பங்களுக்கு வசதியளிக்கும். கல்வித் துறைக்கான உதவியின் கீழ், சிறந்த பாடசாலைகளை மிகவும் வறிய மாவட்டங்களில் நிறுவி வறிய மாணவர்களுக்கு உதவித் தொகையொன்று வழங்கப்படும். கருத்திட்டம் பற்றிய தீர்மானங்களை எடுப்பதில் மற்றும் செயற்படுத்துவதில் சமூகத்தன் கூடிய அளவிலான ஈடுபாடு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டிய நிலையை அதிகரித்து வறியவர்களின் குரல் கேட்கவும் வழிவகுக்கும்.

முரண்பாட்டுக்குப் பிந்திய மற்றும் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முரண்பாட்டு அவதான அணுகுமுறையொன்றை ஆசிய அபிவிருத்தி வங்கி கடைப்பிடிக்கும். பங்காளர்களுடன் தொடர்ச்சியாகக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் மனைசார்ந்த செயற்பாட்டுக் கோட்பாடுகள் இதில் அடங்கும்.

**துறைகள்:** சக்தி சட்டம், பொருளாதார முகாமை, மற்றும் பகிரங்கக் கொள்கை, போக்குவரத்து[1] மற்றும் தொடர்பாடல் நீர் வழங்கல் மற்றும் சுகாதாரம், கல்வி. **தொனிப்பொருள்கள்:** நிலைத்தகவுள்ள பொருளாதார வளர்ச்சி, தனியார் துறை அபிவிருத்தி, நிருவாகம்.

அநுபந்தம் 5இல் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

**ஒவ்வொரு துறைக்குமான நிதியளிப்பு**

குறிப்பான தொகைகள்: வருடாந்தம் 100 மில்லியன் டொலர் – 110 மில்லியன் டொலர் வரை ஆசிய அபிவிருத்தி வங்கியின் பொதுவான மூலதன வளங்களில் இருந்து; வருடாந்தம் 100

மில்லியன் டொலர் - 120 மில்லியன் டொலர் வரை ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆசிய அபிவிருத்தி நிதியத்தில் இருந்து; மற்றும் 3 மில்லியன் டொலர் – 4 மில்லியன் டொலர் வரை கருத்திட்டங்களைத் தயாரிப்பதற்கும் ஆலோசனை உதவிக்காகவும் மான்யங்களில் இருந்து. இலக்குப் பார்க்கப்பட்ட குறிப்பான மொத்த வருடாந்த வள ஒதுக்கீடு 300 மில்லியன் டொலராகவுள்ளதோடு, அரசாங்க – தனியார் துறை பங்காளர் நடவடிக்கைகள் மற்றும் தனியார் தரப்புக் கடன்களினூடாக இதற்கான இணை நிதியளிப்பைப் பெற்றுக் கொள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியும் அரசாங்கமும் எதிர்பார்க்கின்றன.

**பங்காளர் ஏற்பாடு**

இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களிடையே துடிப்பானதொரு ஒத்துழைப்பு அமைப்பு இருந்து வருகிறது. பிரதான அபிவிருத்திப் பங்காளர் கூட்டம் இரு மாதங்களுக்கு ஒருமுறை நடைபெறுவதோடு, சுழற்சி அடிப்படையில் ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா. மற்றும் உலக வங்கி கூட்டங்களுக்குத் தலைமை தாங்குகின்றன. தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கி தலைமைத்துவத்தை வகிக்கிறது. பிரதான குழுவின் கீழ் பல உப குழுக்கள் மற்றும் ஏனைய முறை சாராத தொனிப்பொருள் சார்ந்த குழுக்களும் உள்ளன. கலந்துரையாடல்கள், இணை நிதியளிப்பு மற்றும் அறிவைப் பகிர்ந்து கொள்ளல் ஆகியவற்றினூடாக இலங்கையின் ஏனைய அபிவிருத்திப் பங்காளர்களுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி தொடர்ச்சியாக நெருக்கமாகச் செயற்படுகிறது.

**ஆபத்து மற்றும் தணிப்பு நடவடிக்கைகள்**

முரண்பாட்டுக்கு புறம்பாக அதிக அளவிலான உலக எண்ணெய் விலைகள் மற்றும் அதிக பணவீக்கம் காரணமாக பொருளாதாரத்தின் பல்வேறு அம்சங்களில் காணப்படும் நிச்சயமற்ற தன்மையும் ஆபத்துக்களும் அதிகரித்துள்ளன. இவ்வாபத்துக்களைத் தணிப்பதற்காக (வருமான அதிகரிப்பு மற்றும் செலவினங்களை நெறிப்படுத்தல் மூலம்) வளங்களின் செயற்பாட்டுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி அளிப்பதோடு, அதன் மூலம் மறைமுகமாக பணவீக்க அழுத்தங்களை தணித்து வர்த்தகப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு இலங்கையின் பொருளாதாரம் மற்றும் உலகப் பொருளாதாரத்துக்கிடையிலான தொடர்புகளை விரிவுபடுத்தும்.

## அட்டவணை A6.2: கடன் அல்லாத உற்பத்திகள் மற்றும் சேவைகளுக்கான குறிப்பான உதவிக் குழாய்க்கோடு, 2009 - 2011

| துறை உதவியின் பெயர் | பொறுப்பான பிரிவு | உதவியின் வகுதி a | நிதி மூலங்கள்: ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் b | ஆசிய அபிவிருத்தி வங்கி தொகை ($'000) | ஏனையவை மூலம் c | ஏனையவை தொகை ($'000) | மொத்தம் ($'000) |
|---|---|---|---|---|---|---|---|
| **2009** | | | | | | | |
| **சட்டம், பொருளாதார முகாமைத்துவம், மற்றும் பகிரங்கக் கொள்கை** | | | | | | | |
| 1. படர்ந்த தொழில்நுட்ப திறன் அபிவிருத்தி நிதியம். | SLRM | ADTA | | 2,000.00 | | 0.00 | 2,000.00 |
| 2. நகர்ப்புற உண்ணாட்டதிகார சபைகளின் திறனை அபிவிருத்தி செய்வதற்கான உதவி. | SAUD | ADTA | | 800.00 | | 0.00 | 800.00 |
| **உப மொத்தம்** | | | | **2,800.00** | | **0.00** | **2,800.00** |
| **போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்** | | | | | | | |
| 2. பல வகை போக்குவரத்து ஆய்வு | SATC | ADTA | | 1,000.00 | | 0.00 | 1,000.00 |
| **உப மொத்தம்** | | | | **1,000.00** | | **0.00** | **1,000.00** |
| **சக்தி** | | | | | | | |
| 3. நிலைத்தகவுள்ள சக்தி II | SAEN | PPTA | | 800.00 | | 0.00 | 800.00 |
| **உப மொத்தம்** | | | | **800.00** | | **0.00** | **800.00** |
| **மொத்தம்** | | | | **4,600.00** | | **0.00** | **4,600.00** |
| **2010** | | | | | | | |
| **போக்குவரத்து மற்றும் தொடர்பாடல்** | | | | | | | |
| 1. தேசிய மற்றும் மாகாண வீதிகள் | SATC | PPTA | | 1,000.00 | | 0.00 | 1,000.00 |
| 2. பல வகை போக்குவரத்துக் கருத்திட்டம் | SATC | PPTA | | 1,000.00 | | 0.00 | 1,000.00 |
| **உப மொத்தம்** | | | | **2,000.00** | | **0.00** | **2,000.00** |
| **சட்டம், பொருளாதார முகாமைத்துவம் மற்றும் பகிரங்கக் கொள்கை.** | | | | | | | |
| 3. பகிரங்க நிதி முகாமை | SAGF | PPTA | | 1,000.00 | | 0.00 | 1,000.00 |
| **உப மொத்தம்** | | | | **1,000.00** | | **0.00** | **1,000.00** |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **நீர் விநியோகம், சுகாதாரம் மற்றும் கழிவு முகாமை** | | | | | | |
| 4. நகர்ப்புற சுற்றாடல் சீர்திருத்தக் கருத்திட்டம் (துணை நகரங்கள்) | SAUD | PPTA | | 800.00 | 0.00 | 800.00 |
| **உப மொத்தம்** | | | | **800.00** | **0.00** | **800.00** |
| **கல்வி** | | | | | | |
| 5. தேசிய கல்வித்துறைக் கருத்திட்டம் | SANS | PPTA | | 800.00 | 0.00 | 800.00 |
| **உப மொத்தம்** | | | | **800.00** | **0.00** | **800.00** |
| 2011 | | | | | | |
| **சட்டம், பொருளாதார முகாமைத்துவம், மற்றும் பகிரங்கக் கொள்கை** | | | | | | |
| 1. படர்ந்த தொழில்நுட்பத் திறன் அபிவிருத்தி நிதியம் II | SLRM | ADTA | | 2,000.00 | 0.00 | 2,000.00 |
| **உப மொத்தம்** | | | **2,000.00** | | **0.00** | **2,000.00** |
| **நீர் விநியோகம், சுகாதாரம் மற்றும் கழிவு முகாமை** | | | | | | |
| 2. நகர்ப்புற சுற்றாடல் சீர்திருத்தக் கருத்திட்டம் (துணை நகரங்கள்) | SAUD | PPTA | | 1,000.00 | 0.00 | 1,000.00 |
| **உப மொத்தம்** | | | | **1,000.00** | **0.00** | **1,000.00** |
| **மொத்தம்** | | | | **3,000.00** | **0.00** | **3,000.00** |

ADB=ஆசிய அபிவிருத்தி வங்கி, ADTA=ஆலோசனை தொழில்நுட்ப உதவி, PPTA=கருத்திட்ட தயாரிப்பு தொழில்நுட்ப உதவி
மூலம்: ஆஅவ மதிப்பீடுகள்